**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் மற்றும் நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1996 திசெம்பர் 20 ஆந் திகதிய தாவர பூங்காக்கள் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை உறுதி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதியததின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி கணினி அச்சீட்டு குறிப்பின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 247,300,685 ஆக இருந்த போதும் நிதியத்தின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் ரூபா 246,265,439 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,035,246 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியான மீதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதி கூற்றுக்களில் முன்னைய ஆண்டின் வேறு ஏனைய வருமானம் ரூபா 696,580 கூடுதலாக கணக்கீடு செய்த தவறுகளை திருத்துவதற்காக ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடும் போது கழிக்கப்பட்ட வேண்டிய ரூபா 696,580 தொகை சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், இவ்வேறுபாடு மீளாய்வாண்டின் உரிமை மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டு இருந்தது | அடுத்த கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியான மீதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பெறுமதி (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த நிதியத்தை மூடி விடுவதற்கு அமைச்சரவை தீர்மானமொன்று வழங்கப்பட்டிருக்கையில் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இந்நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை நியதிச் சட்ட நிதியமொன்றாக மாற்றுவதற்கு அமைச்சரவை பத்திரமொன்று வரைவாக்கப்பட்டு சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | - | சட்ட நிதியமொன்றாக மாற்றுவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிப்பதற்காக தேவையான அமைச்சரவை பத்திரமொன்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் கலைப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 200,260,522 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா. 101,335,943 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 98,924,579 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இக் குறைவுக்கு நுழைவுச் சீட்டு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேராதனை ரோயல் தாவர பூங்காவில் ரூபா 3,344,731 இற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறுவர் கல்வி பிரிவுக்குரிய ஒப்பந்தத்தில் இரண்டு வேலை விடயங்களுக்குரிய நிறைவேற்றப்படாத வேலைக்காக ரூபா 174,627 கொடுப்பபனவு செய்யப்பட்டிருந்தது.<br>கருத்து தெரிவிக்கவில்லை | பதிலளிக்கப்படவில்லை | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பணத்தை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 08 ஆண்டுகாலப் பகுதியில் தேவைப்பாடு தொடர்பாக முறையான ஆய்வு ஒன்று இல்லாமல் ரூபா 8,168,765 ஆன கிரயத்தில் அச்சிடப்பட்ட 06 வகை புத்தகங்களுக்குரிய 4250 பிரதிகளில் ரூபா 7,111,375 ஆன 3636 பிரதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விற்பனை செய்ய முடியாமல் விளைவற்று இருந்தன. | கொவிட் 19 நிலைமை அடிப்படையில் சுற்றுலா பயணிகள் குறைவடைந்தமை மற்றும் ரோயல்தாவர பூங்காவின் 200 ஆண்டுகள் நிறைவை கொண்டாடுவதற்கு அண்மித்ததாக தொடங்கப்பட்ட ஆரம்ப விழாவை நடத்தப்படாமை காரணமாக விற்பனை செய்யப்படவில்லை என்பதாக | முறையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு தேவைப்பாடு இனங் காணப்பட்டு புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும் |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது தேவைப்பாடு தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் ரூபா 5,796,360 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 7000 நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டக் கூடங்களுக்கு இடையே ரூபா 4,591,876 ஆன 5507 நினைவுச் சின்னங்களும் கட்டக் கூடங்களும் மீளாய்வாண்டின் திசெசம்பர் 31 ஆந் திகதி வரை விற்பனை செய்ய முடியாமல் விளைவற்று காணப்பட்டது | ரோயல் தாவர பூங்காவின் 200 ஆண்டுகள் நிறைவை கொண்டாடுவதற்கு அண்மித்ததாக தொடங்கப்பட்ட ஆரம்ப விழாவை நடத்தப்படாமை காரணமாக விற்பனை செய்யப்படவில்லை என்பதாக | தேவைப்பாட்டின் மீது கொள்வனவு செய்யப்பட வேண்டும் |

## 4 கணக்களிதன்மையும் நள்ளாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 23 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் 53,985,000 இல் ரூபா 19,557,129 பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 03 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டு இருந்தது. | விதந்துரைகளுக்கு இணங்க கேள்வி முன்வைக்காமை, வழங்குனர் நிறுவனத்தினால் பொறுப்பேற்காமை, நிறுவனத்தில் தடைகள் ஏற்பட்டமை, பட்டியல் சமர்ப்பிக்காமை, 2023 ஆம் ஆண்டின் இறுதி 06 மாதங்கள் தொடர்ச்சியான மழை காணப்பட்டமை மற்றும் செயற்பாடு முடிவடைவதற்கு தாமதமானமை காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது | நிதி ஏற்பாடு செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும் |